இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 153 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – மார்கழி 27 – சனிக்கிழமை 11 ஜனவரி 2025 – மதுரை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 153 : Thiruvalluvar Year - 2055 - Margazhi 27 - Saturday 11 January 2025 - Madurai 16 Pages ₹ 5.00


## ‘பெண்களுக்குப் பாதுகாப்பான மாநிலம் தமிழ்நாடு!’

# பாலியல் குற்றம் புரிவோருக்கு கடும் தண்டனை நிச்சயம்!

## பேரவையில் – இரண்டு சட்டமுன்வடிவுகளை அறிமுகம் செய்து முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.1.2025) சட்டமன்றப் பேரவையில், பெண்களுக்கெதிரான குற்றங்களைத் தடுக்கும் வகையில் இரண்டு சட்டமுன்வடிவுகளை அறிமுகம் செய்து உரையாற்றினார்.

**சென்னை, ஜன.11-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று காலை, இரண்டு சட்டமுன்வடிவுகளைத் தாக்கல் செய்து உரையாற்றினார். பாலியல் வன்புணர்ச்சியில் ஈடுபடுபவர்களுக்கு இதற்கு முன்பு 10 ஆண்டுகள் தண்டனை வழங்கப்பட்ட நிலையில், தற்போது 14 ஆண்டுகளுக்கு குறையாத கடுங்காவல் தண்டனை வழங்க வகை செய்யும் சட்ட முன்வடிவுகள் இவை!**

காவல்துறை ஊழியர் மற்றும் அவரது நெருங்கிய உறவினரால் பாலியல் வன்புணர்ச்சி குற்றங்களுக்கு10 ஆண்டுகள் தண்டனையை திருத்தி தற்போது 20 ஆண்டுக்கு குறையாத கடுங்காவல் தண்டனை வழங்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது.

வன்புணர்ச்சி மற்றும் மரணத்தை விளைவிக்கும் குற்றத்தைச் செய்யும் நபருக்கு 20 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனையை மாற்றி ஆயுள் தண்டனை விதிக்கும் வகையில் சட்டத்திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

மேலும், கூட்டு வன்புணர்ச்சி மற்றும் 18 வயதுக்குட்பட்ட பெண்ணை கூட்டு வன்புணர்ச்சியில் ஈடுபடுபவர்களுக்கு இதற்கு முன்பு ஆயுள் சிறை வழங்கப்பட்டுள்ள நிலையில், தற்போது மரண தண்டனை வழங்கும் வகையில் சட்டத்திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், பெண்ணைப் பின் தொடர்ந்தால் வழங்கப்படும் தண்டனையை ஐந்தாண்டுகள் வரை நீட்டித்தும், அமிலம் முதலியவற்றைப் பயன்படுத்துவதன் மூலம் தன்னிச்சையாக கொடுங்காயம் விளைவித்தால் ஆயுட்கால சிறை தண்டனை அல்லது எஞ்சியுள்ள இயற்கையான ஆயுட்காலம் வரை கடுங்காவல் சிறை தண்டனை வழங்கப்படும் என சட்டத்திருத்தத்தில் கூறப்பட்டுள்ளது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று கொண்டு வந்த சட்ட முன்வடிவுகள், விவாதத்திற்கு பிறகு சட்டப்பேரவையில் இன்று நிறைவேற்றப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக இந்தச் சட்ட முன்வடிவுகளைப் பேரவையில் தாக்கல் செய்து உரையாற்றிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பெண்களுக்குப் பாதுகாப்பான மாநிலம் தமிழ்நாடு என்றும், “பாலியல் குற்றம் புரிவோருக்கு கடும் தண்டனை நிச்சயம்” என்றும் உறுதிபடத் தெரிவித்தார்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை

**பெண்களுக்கெதிரான குற்றங்களைத் தடுக்கும் வகையில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் இரண்டு சட்டமுன்வடிவுகளை அறிமுகம் செய்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-**

பெண்களுக்கெதிரான குற்றங்கள் தொடர்பாக உரிய சட்டத் திருத்தங்களோடு இரண்டு சட்டமுன்வடிவுகளை இந்த அவையில் அறிமுகம் செய்வதற்குமுன், அவற்றின் முக்கியத்துவத்தைப் பற்றிய விவரங்களைத் தங்களுடைய அனுமதியோடு முன்னுரையாக நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

சமூகத்தின் சரிபாதியான பெண் இனத்தின் மேன்மைக்கும், வளர்ச்சிக்கும், பல்வேறு திட்டங்களை உருவாக்கித் தரும் அரசு திராவிட முன்னேற்றக் கழக அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) சமூகம், அரசியல், பொருளாதாரம் ஆகிய அனைத்து வகையிலும் பெண்களை முன்னேற்றி வரும் அரசாக நமது அரசு செயல்பட்டு வருகிறது. இந்த வளர்ச்சியை நாம் தினந்தோறும் அறிந்தும், உணர்ந்தும் வருகிறோம்.

### பெண்களின் சமூகப் பங்களிப்பு அதிகமாகி வருகிறது

இதன்மூலமாக, பெண்களின் சமூகப் பங்களிப்பு அதிகமாகி வருகிறது. இத்தகைய சூழலில் பெண்களுக்குப் பாதுகாப்பான மாநிலமாக, தமிழ்நாடு திகழ்ந்து வருகிறது. பெண்கள் அதிகம் வேலைக்குச் செல்லும் மாநிலமாக, பெண்கள் அதிகமான சமூகப் பங்களிப்பு வழங்கும் மாநிலமாக தமிழ்நாடு வளர்ந்து வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

அதேநேரத்தில், பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்தாக வேண்டும். பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்வதிலும், பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகளில் ஈடுபடுவோர்மீது தயவு தாட்சண்யமின்றி நடவடிக்கை எடுத்து, சட்டப்படி அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய தண்டனைகளை வாங்கித் தருவதிலும் உறுதியோடு செயல்பட்டு வருகிறது தமிழ்நாடு அரசு. அரசின் இந்த நடவடிக்கைகளைப் பற்றி இந்த மாமன்றத்தில் நான் பலமுறை எடுத்துரைத்துள்ளேன்.

பெண்களுக்கு எதிரான குற்றங்களை இரும்புக்கரம் கொண்டு அடக்கி ஒடுக்கி வருகிறது இந்த அரசு. 86 விழுக்காட்டிற்கு மேலான வழக்குகளில் 60 நாட்களுக்குள் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது இந்த அரசில்தான். பள்ளிகள், கல்லூரிகள், பொது இடங்களில் பெண்கள் பாதுகாப்பு பற்றி 2 இலட்சத்து 39 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்திக் காட்டியுள்ளதும் இந்த அரசுதான். சத்யா என்ற பெண் ரயிலில் தள்ளிவிட்டு கொலை செய்யப்பட்ட வழக்கில் தூக்குத் தண்டனை பெற்றுக் கொடுத்திருப்பதும் இந்த அரசுதான். (மேசையைத் தட்டும் ஒலி)

### பெண்களது பாதுகாப்பை உறுதி செய்யும் அரசாக செயல்பட்டு வருகிறது!

அனைத்துப் பெண்களது பாதுகாப்பையும் உறுதி செய்யும் அரசாக தமிழ்நாடு அரசு செயல்பட்டு வருகிறது. பெண்களுக்கு இழைக்கப்படும் பாலியல் வன்கொடுமை என்பது யாராலும் மன்னிக்க முடியாத குற்றம். இத்தகைய கொடூரக் குற்றங்களில் ஈடுபடுவோருக்கு வழங்கப்பட வேண்டிய தண்டனை என்பது, இத்தகைய செயல்களில் ஈடுபட முனைவோருக்கான கடும் எச்சரிக்கையாக இருந்திட வேண்டும். இந்த வகையில், B.N.S. சட்டத்தின் கீழும், நமது மாநில அரசு சட்டங்களின் கீழும் ஏற்கெனவே இத்தகைய குற்றங்களுக்கு தண்டனைகள் வரையறுக்கப்பட்டு இருந்தாலும், இத்தண்டனைகளை மேலும் கடுமையாக்கிட வேண்டிய அவசியம் உள்ளதாகவே இந்த அரசு கருதுகிறது.

இந்த அடிப்படையில், இத்தகைய குற்றங்களுக்கான தண்டனையை மேலும் கடுமையாக்குவதற்கு, B.N.S, மற்றும் B.N.S.S. சட்டங்களில் மாநில சட்டத் திருத்தத்திற்கும், ’தமிழ்நாடு 1998ஆம் ஆண்டு பெண்ணிற்குத் துன்பம் விளைவித்தலைத் தடை செய்யும் சட்டத் திருத்தத்திற்கும், சட்டமுன்வடிவுகளை பேரவையின் ஒப்புதலுக்காக முன்வைக்கிறேன். அனைத்து உறுப்பினர்களும் இதற்கு ஒப்புதல் அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

## அறிவிலிகளின் அவதூறுகளால்

# தந்தை பெரியாரின் புகழை மறைக்க முடியாது!

## கழகப் பொதுச் செயலாளர் – அமைச்சர் துரைமுருகன் அறிக்கை!

**சென்னை, ஜன. 11-**

**“மானமும் அறிவும் இருப்பவர்கள் பெரியாரை இழிவாகப் பேச மாட்டார்கள்! அறிவிலிகளின் அவதூறுகளால் அவர் புகழை மறைக்க முடியாது!” என்று - கழகப் பொதுச்செயலாளர் - அமைச்சர் துரைமுருகன் அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.**

அவரது அறிக்கை வருமாறு:-

மனித குலத்தின் சமூக விடுதலைக்கான மாபெரும் தலைவர் தந்தை பெரியார். தன் வாழ்நாளின் கடைசி நாட்கள் வரை சமூகநீதிக்காகச் சளைக்காமல் பாடுபட்ட திராவிட இயக்கப் பெருந்தலைவர் அவர். தன் மனதில் தோன்றிய சிந்தனைகளை எவருக்கும் அஞ்சாமல் துணிந்து கூறியவர்.

அவருடைய பகுத்தறிவு - சுயமரியாதைச் சிந்தனைகள் சமுதாயத்தின் இருட்டை விரட்டி வெளிச்சத்தை உண்டாக்கின. தன்னுடைய கருத்துகளாகவே இருந்தாலும் அதனைக் கேட்பவர்கள் தங்களுடைய சொந்தப் புத்தியினால் சிந்தித்து, அதன் பிறகே ஏற்றுக்கொள்ள வேண்டும் என வலியுறுத்திய உலகச் சிந்தனையாளர்



தந்தை பெரியார்.

### தன் வாழ்நாள் முழுவதும் இலட்சியத்துடன் பாடுபட்டவர்!

மனிதர்களிடையே சாதி, மதம், மொழி, நிறம், பாலினம் என எந்த வகை ஏற்றத்தாழ்வும் இல்லாத சமத்துவச் சமுதாயம் அமைந்திட வேண்டும் என்ற உயர்ந்த இலட்சியத்துடன் தன் வாழ்நாள் முழுவதும் பாடுபட்டவர். அவருடைய கொள்கை உறுதியின் விளைவாக, தேர்தல் களத்தையே காணாமல் தன் இலட்சியங்களை அரசாங்கத்தின் சட்டங்களாகத் திட்டங்களாக மாறச் செய்து, தான் வாழும் காலத்திலேயே அவை நிறைவேறிடக் கண்டவர்.

### “ஈ.வெ.ரா.பெரியார்; இந்த மண்ணின் மணாளர்!”

‘மண்டைச் சுரப்பை உலகு தொழும்’ என அவரைப் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் பாடினார். கொள்கையில் எதிர்துருவமாக இருந்த ராஜாஜி, ‘என் அன்பான எதிரி’ என்று பெரியாரைப் பாராட்டினார். அவரோடு முரண்பட்டவர்களும்கூட அவருடைய தூய தொண்டினை, போராட்டக் குணத்தை, ஒளிவுமறைவின்றிக் கருத்துகளை வெளிப்படுத்தும் தன்மையைப் புகழ்ந்திடத் தவறவில்லை. “ஈ.வெ.ரா.பெரியார்; இந்த மண்ணின் மணாளர்” என்று புகழ்ந்துரைத்தார் அக்கிரகாரத்து அதிசய மனிதரான வ.ரா.

உயர்ந்த சிந்தனை கொண்ட மனிதர்கள், தெளிந்த உள்ளம் கொண்ட தலைவர்கள் எந்தக் கட்சியில் இருந்தாலும் தந்தை பெரியாரின் கருத்துகளை மதிப்பார்கள். அவருடைய தொண்டினைப் போற்றுவார்கள். பெரியார் எந்த நேரத்தில், எந்தச் சூழலில், என்ன சொன்னார் என்று பெரியார் சொன்ன பகுத்தறிவுக் கண்ணோட்டத்துடன் ஆராய்ந்து பார்த்துச் செயல்படுவார்கள்.

### தமது ஆட்சியையே பெரியாருக்குக் காணிக்கையாக்கியவர் பேரறிஞர் அண்ணா!

திராவிட முன்னேற்றக் கழகம் என்பதே தந்தை பெரியாரிடமிருந்து பிரிந்து வந்து, பேரறிஞர் அண்ணாவால் உருவாக்கப்பட்ட இயக்கம்தான். தந்தை பெரியாரின் இலட்சியத்தை அரசியல் வழியில் முன்னெடுத்தார் பேரறிஞர் அண்ணா. அப்போது இரு இயக்கங்களுக்குமிடையிலான கருத்து மோதல்கள் இருந்தன. அவற்றையெல்லாம் கடந்துதான், 1967-இல் பெரியாரின் வாழ்த்துகளுடன் ஆட்சிப் பொறுப்பேற்று, “இந்த ஆட்சியே பெரியாருக்குக் காணிக்கை” என்றார் பேரறிஞர் அண்ணா.

### பெரியார் நெஞ்சில் தைத்த முள்ளை அகற்றியவர் கலைஞர்!

பெரியாரின் கொள்கைகளை நடைமுறைப்படுத்தி பெண்களுக்குக் குடும்பச் சொத்தில் சமபங்கு கொடுத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர். அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராக வேண்டும் என்ற சட்டத்தை நிறைவேற்றி, பெரியாரின் நெஞ்சில் தைத்த முள்ளை அகற்றிட முனைந்தவரும் அவர்தான். அந்தச் சட்டத்தின்படி அனைத்துச் சாதியினருக்கும் அர்ச்சகர் பணி ஆணை வழங்கி, முள்ளை அகற்றியவர் முதலமைச்சர் - கழகத் தலைவர் தளபதி அவர்கள்.

### பெரியார் எனும் ஆலமரம் மீது உரசிப் பார்க்கும் மண்ணாந்தைகள்!

தந்தை பெரியாரின் பிறந்தநாளைச் சமூகநீதி நாளாகவும், டாக்டர் அம்பேத்கர் பிறந்தநாளைச் சமத்துவ நாளாகவும் கடைப்பிடிக்கிறது, முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசு.

**தந்தை பெரியாரின் கொள்கைகளே இன்றும் தமிழ்நாட்டை வழிநடத்துகின்றன. அதனால்தான் இதனை ‘பெரியார் மண்’ என்று சொல்கிறோம். சில மண்ணாந்தைகளுக்கு இது புரிவதில்லை. பெரியார் என்ன சொன்னார், எப்போது சொன்னார் என்பது பற்றி தெரியாமலும், பெரியார் சொல்லாதவற்றையும் கூட அவர் சொன்னதாக அபாண்டமாக அவதூறு பரப்பியும், யாருக்கோ ஏஜெண்ட்டாக இங்கே அரசியல் நடத்திக் கொண்டிருக்கும் தற்குறிகள், தங்கள் சொந்த அரிப்பைத் தீர்த்துக் கொள்வதற்காக பெரியார் என்ற ஆலமரத்தின் மீது உரசிப் பார்க்கின்றன.**

இதற்கும் தொலைநோக்குச் சிந்தனையாளரான பெரியாரே நமக்கு வழிகாட்டுகிறார்.

### மானமற்ற கூட்டத்துடன் மல்லுக்கட்ட வேண்டியதில்லை!

“மானமுள்ள ஆயிரம் பேருடன் போராடலாம். மானமற்ற ஒருவனுடன் போராடுவது கஷ்டமான காரியம்” என்று 1936-ஆம் ஆண்டிலேயே ‘குடிஅரசு’ ஏட்டில் பெரியார் எழுதியிருக்கிறார். அவர் சொல்லியுள்ளபடி, மானமற்ற கூட்டத்துடன் நாம் மல்லுக்கட்ட வேண்டியதில்லை. மானமும் அறிவும் உள்ளவர்கள் பெரியாரை இழிவு செய்ய மாட்டார்கள். பெரியார், தான் வாழும் காலத்திலேயே பல எதிர்ப்புகளை நேரடியாக எதிர்கொண்டு, இலட்சியப் போராட்டத்தில் வெற்றி கண்டவர். தன் மீதான அவதூறுகளை தன் கொள்கைத் தடியால் அடித்து நொறுக்கி, சமுதாயத்திற்கு விடியலைத் தந்தவர். அறிவிலிகளின் அவதூறுகளால் அவர் புகழை ஒருபோதும் மறைக்க முடியாது.

தந்தை பெரியார் புகழை நாம் என்றென்றும் போற்றுவோம்! அவர் மீது அவதூறு பரப்பி விளம்பரம் தேட நினைக்கும் இழிவான - மலிவான அரசியல் பேர்வழிகளைப் புறக்கணிப்போம்! எதையாவது செய்து, தமிழ்நாட்டின் அமைதியைக் குலைக்கலாமா என நினைப்பார்களேயானால், சட்டம் தன் கடமையை நிச்சயம் செய்யும்!

இவ்வாறு கழகப் பொதுச் செயலாளர், அமைச்சர் துரைமுருகன் அவர்கள் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.